**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம். கமுதி**

**முன்னிலை : திருமதி. G. தங்க கார்த்திகா., B.Sc., B.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், கமுதி**
**2026 ஆம் வருடம் மே மாதம் 26 ம் நாள் செவ்வாய்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 88/2021**
**CNR. NO.TNRM070002182021**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | கமுதி காவல்நிலையம் குற்ற எண் – 115/2019 |
| எதிரியின் விபரம் | | |
| 2. | பெயர் | முனியசாமி (பந்தல்முனியசாமி ) |
| 3. | த/பெ. | காளியப்பன் |
| 4. | தொழில் | -- |
| 5. | முகவரி | காளியம்மன் கோவில் தெரு, கமுதி |
| 6. | வயது | 42/19 |
| | | |
| 7. | சம்பவ நாள் | 11-06-2019 ம் தேதி 16.30 மணி |
| 8. | புகார் தேதி | 12-06-2019 ம் தேதி 10.00 மணி |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | 12-06-2019 |
| 10. | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 17-06-2019 |
| 11. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | 16-03-2021 |
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | 25-05-2026 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | 25-05-2026 |
| 14. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, |

| | | |
|---|---|---|
| | | 354 and 4 of TNPHW Act ன் கீழ் |
| | வனையப்பட்ட குற்றச்சாட்டு | எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 354 and 4 of TNPHW Act ன் கீழ் |
| 15. | காலதாமதத்திற்கான காரணம் | சாட்சிகள் உரிய காலத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை |
| 16. | அரசு தரப்பு சாட்சிகள் | <table><tr><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr><tr><td>அ.சா.1</td><td>25.05.2026</td><td>25.05.2026</td></tr><tr><td>அ.சா.2</td><td>25.05.2026</td><td>25.05.2026</td></tr><tr><td>அ.சா.3</td><td>25.05.2026</td><td>25.05.2026</td></tr></table> |
| 17. | எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | 26-05-2026 |
| 18. | எதிரி தரப்பு சாட்சிகள் | இல்லை |
| 19. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 320 Cr.P.C/359 BNSS பிரிவின் படியான மனுக்கள் | U/s. 320 Cr.P.C Petition filed and dismissed in M.P. No. 07/2026, dated: 25.05.2026 |
| 20. | எதிரி/குற்றமுறையீட்டாளர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 311 Cr.P.C/348 BNSS பிரிவின் படியான மனுக்கள் | U/s. 311 Cr.P.C Petition filed and allowed in M.P. No. 06/2026, dated: 25.05.2026 |
| 21. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 70(2) Crpc/ 72(2) BNSS பிரிவின் படியான மனுக்கள் | U/s.70(2) Cr.P.C Petition filed and allowed in Cr.M.P.No.3205/2022, dt. 17.06.2022 |
| 22. | அரசு தரப்பு வழக்கறிஞர் | திருமதி. N. கார்த்திகா பிரியதர்ஷினி |



THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:30:52 +0530

| | | |
|---|---|---|
| 23. | எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு. N.சாரதி |
| 24. | எதிரியின் கூற்று | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார் |
| 25. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | 26-05-2026 |
| 26. | வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 26-05-2026 |
| 27. | நீதிபதியின் முடிவு | முடிவாக, எதிரி இதச பிரிவுகள் 294(பி), 323, 354 and 4 of TNPHW Act ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரி குவிமுச பிரிவு 248 (1) ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார். எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.<br>இவ்வழக்கில் தடயசொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தடயசொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. |

இந்த வழக்கு 16-03-2021ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு 26-05-2026 ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-1 திருமதி. N. கார்த்திகா பிரியதர்ஷினி அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. N. சாரதி, B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை உரிய கவனத்துடன் கேட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலித்தும் இன்று **(26-05-2026)** இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.05.26 19:30:57 +0530

**தீர்ப்புரை**

**அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையில் இருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கு : –**

1. இவ்வழக்கின் புகார்தாரராகிய மாரீஸ்வரி என்பவர் கடந்த 11.06.2019 ம் தேதி மாலை 04.30 மணியளவில் வீட்டில் இருந்த போது எதிரியானவர் புகார்தாரரின் வீட்டிற்கு வந்து எதிரியின் மகன் சஞ்சய் என்பவர் புகார்தாரரின் வீடு முன்பு நின்று கொண்டிருந்ததை பார்த்த எதிரியானவர் அவரது மகனை பார்த்து இங்க நிக்கிற உனக்கு இங்க என்னடா வேலை என்று சொல்லி ஏற்கனவே புகார்தாரர் கூட பேச கூடாது வீட்டுக்கு போக கூடாது என்று கண்டித்தும், ஏண்டா போன என்று பேசி அவரது மகனை அடித்ததற்கு புகார்தாரர் உன் மகனை நான் கூப்பிடல அவன் இங்கு வந்ததே எனக்கு தெரியாது என்று சொன்னவுடன் எதிரி புகார்தாரரைப் பாத்து நீ தாண்டி தேவிடியா முண்ட அவன அரிப்பு எடுத்து வர சொல்லி இருப்ப என்று அசிங்கமாக பேசிக் கொண்டே புகார்தாரரின் தலைமுடியைப் பிடித்து இழுத்து கீழே தள்ளி காலால் மிதித்து கையால் புகார்தாரரின் இடது கன்னத்தில் காதை சேர்த்து அடித்து உன்னை நடுத்தெருவில் வைத்து சேலையை உறிந்து அசிங்கப்படுத்தாமல் விடமாட்டேன்டி கேவலமான பொம்பளையான நீ எல்லாம் ஏண்டி உயிரோட அலையுர செத்து தொலைய வேண்டியது தானே என அசிங்கமாகப் பேசி அவமானப்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 354 and 4 of TNPHW Act ன் கீழ் கமுதி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. குற்ற இறுதி அறிக்கையை பெற்று மேற்படி வழக்கானது நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரி பிணையில் சென்றுள்ளதால்



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:31:05 +0530

அவருக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அவருக்கு குவிமுச பிரிவு 207 ன் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. போதிய கால அவகாசத்திற்கு பின் 01-07-2022ம் தேதியன்று எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரி குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் கு.வி.மு.ச. பிரிவு. 240(1) ன் படி எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 354 and 4 of TNPHW Act ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து அது குறித்து கு.வி.மு.ச. பிரிவு. 240(2) ன் படி எதிரிக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டுள்ளது. அதற்கு எதிரி தான் குற்றவாளி இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு கு.வி.மு.ச. பிரிவு. 242-ன் கீழ் உத்தரவிடப்பட்டுள்ளது.

4. குற்ற இறுதி அறிக்கையில் கண்ட பட்டியல் சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் அ.சா.1 மற்றும் எதிரி சமாதானமாக சென்று விட்டதாக பிரிவு 320 (2) குவிமுச வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சமரசம் செய்துகொள்ள முடியாத குற்றம் என்பதால் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சமரச மனுவானது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.3** சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுப் பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5. <u>அரசு தரப்பு சாட்சியங்களின் சுருக்கம்</u>**

i. அரசுத் தரப்பில் மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களில் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சிகள் பிறழ்சாட்சிகளாகி சாட்சியம் அளித்துள்ளார்.

ii. அசா.3 கமுதி காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளர் ஆவார். இவர் தனது சாட்சியத்தில் வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் திரு.சேகர் முனியப்பன் அவர்கள் கையொப்பம் நன்கு பரிட்சயம் என்றும், ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாக கூறி சார்பு ஆய்வாளர் திரு. சேகர் முனியப்பன் அவர்கள் கடந்த 11.06.2019ம் தேதியன்று இரவு 19.00 மணிக்கு மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த அ.சா.1 அளித்த புகார் வாக்குமூலத்தைப் பெற்று நிலையக் குற்ற எண்.115/2019 இதச பிரிவுகள் 294(b), 323, 354, 509 மற்றும் 4 of TNPHW Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும், மறுநாள் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தும், சம்பவ சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரியை கைது செய்து பாராவசம் ஒப்படைத்தும், அ.சா.1 தூக்க மாத்திரை எடுத்து விழுங்கி தற்கொலைக்கு முயன்றது உண்மை என்று தெரியவந்ததால் வழக்கின் சட்டப்பிரிவுகளை 294(b), 323, 354, 509 மற்றும் 4 of TNPHW Act லிருந்து 294(b), 323, 354 மற்றும் 4 of TNPHW Act ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து, அத்துடன் வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீது இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:31:16 +0530

iii. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றிய சாட்சியங்கள் குறித்து குவிமுச.313(1)(ஆ) பிரிவின் படி கேள்விகள் கேட்க எதிரி சாட்சியங்களை பொய் என்றும், தனது தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததன் பேரில் எதிரி தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டது.

6. **<u>தீர்வுக்குரிய பிரச்சனை :-</u>**

i. எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 354 and 4 of TNPHW Act ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபித்துள்ளதா?

ii. அவ்வாறு குற்றம் நிரூபிக்கப்பட்டிருப்பின் எதிரிக்கு கிடைக்கக்கூடிய தண்டனை விவரம் என்ன? என்பதே இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

iii. இரு தரப்பும் வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**7. அரசு தரப்பு வழக்கினை எதிரிக்கு எதிராக நிரூபித்துள்ளதா? என்பதை முடிவு செய்ய அரசு தரப்பு சாட்சியங்களை ஆராயும் போது:-**

i. அசா.1 வழக்கின் நிகர்நிலை புகார்தாரர் ஆவார். அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரியால் தனக்கு காயம் ஏற்படவில்லை என்றும், கூட்டத்திற்குள் சென்று கீழே விழுந்ததில் லேசான காயம்பட்டதாகவும், தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு கமுதி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, மதுரை அரசு மருத்துவமனையில் மேல் சிகிச்சை பெற்றதாகவும், தான் மதுரை அரசு மருத்துவமனையில் இருந்த போது போலீசார் ஒரு வெள்ளை பேப்பரில் கையொப்பம் (அ.சா.ஆ.1) பெற்றதாக கூறியதால் அரசுத் தரப்பில் பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக சேர்க்கப்பட்ட அ.சா.2

தனக்கு வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றும், சுமார் 5,6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் வீட்டில் இருந்த போது போலீசார் ஏதோ வழக்கு விசாரணை என்று கூறி தன்னிடம் கையொப்பம் (அ.சா.ஆ.2) பெற்றதாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி இருவரின் சாட்சியமும் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

ii. இவ்வழக்கில் அ.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்ட சிறப்பு சார்பு ஆய்வாளர் அவர்கள் தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் திரு. .சேகர் முனியப்பன் அவர்கள் கடந்த 11.06.2019 ம் தேதியன்று இரவு 19.00 மணிக்கு மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலத்தைப் **(அ.சா.ஆ.3)** பெற்று நிலையக் குற்ற எண்.115/2019 இதச பிரிவுகள் 294(b), 323, 354, 509 மற்றும் 4 of TNPHW Act ன் கீழ் வழக்கு பதிவு செய்து புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் **(அ.சா.ஆ.5)** மற்றும் மாதிரி வரைபடம் **(அ.சா.ஆ.6)** தயார் செய்தும், சாட்சிகள் இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், சம்பவ இட சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

iii. மேலும் அ.சா.3 ன் சாட்சியத்தின் படி சார்பு ஆய்வாளர் அவர்கள் 12.06.2019 ம் தேதி 13.00 மணிக்கு கமுதி அரண்மனை மேடு குடோன் அருகில் வைத்து எதிரியை கைது செய்து நிலையம் அழைத்து வந்து பாராவசம் ஒப்படைத்தும், பின்னர் வழக்கின் புலன்விசாரணையிலிருந்தும் சாட்சிகளின் வாக்குமூலத்தில் இருந்தும் அ.சா.1 தூக்க மாத்திரை எடுத்து விழுங்கி

தற்கொலைக்கு முயன்றது உண்மை என்று தெரியவந்ததால் வழக்கின் சட்டப்பிரிவுகளை 294(b), 323, 354, 509 மற்றும் 4 of TNPHW Act லிருந்து 294(b), 323, 354 மற்றும் 4 of TNPHW Act ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **(அ.சா.ஆ.7)** தயார் செய்து அத்துடன் புலன்விசாரணை முடித்து இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையிலான சாட்சிகள் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் அ.சா.3 ன் சாட்சியத்தால் எவ்வித பலனும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. எனவே அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி சாட்சியங்களின் ஆய்விலிருந்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 354 and 4 of TNPHW Act ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்வுக்குரிய பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் பதில் அளிக்கிறது.

iv. இறுதியாக, இந்நீதிமன்றம், எதிரி பிரிவுகள் 294(பி), 323, 354 and 4 of TNPHW Act ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து, மேற்படி எதிரியை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார். எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.

v. இவ்வழக்கில் தடய சொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தடய சொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:31:34 +0530

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் என்னால் கையொப்பமிடப்பட்டு நீதிமன்ற முத்திரை வைக்கப்பட்டு 2026ம் ஆண்டு மே திங்கள் 26ம் நாள் செவ்வாய்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:31:42 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி

**அரசு தரப்பு சாட்சிகள்:—**

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி. மாரீஸ்வரி |
| அ.சா.2 | திருமதி. வீரம்மாள் |
| அ.சா.3 | திரு. ராமமூர்த்தி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:—**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 12.06.2019 | புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை மட்டும் |
| அ.சா.ஆ.2 | 12.06.2019 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சிக் கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 12.06.2019 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.4 | 12.06.2019 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 12.06.2019 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.6 | 12.06.2019 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.7 | 11.02.2021 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்றுபொருள்:—** இல்லை

**எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள்:—** இல்லை



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:31:47 +0530

<u>குறிப்பு :–</u>

1. எதிரி வழக்கு விசாரணையின் போது பிணையில் இருந்தார்.

2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.

3. தீர்ப்பு பற்றி காவல்துறையினருக்கு  தெரிவிக்கப்பட்டது.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 19:31:53 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.

# C A L E N D A R A N D J U D G M E N T

(For use in cases whether there are more accused persons than one)

District of RAMANATHAPURAM.

Calendar of cases tried by the **Tmt. G. Thanga Karthika., B.Sc., B.L.,**

District Munsif-cum-Judicial Magistrate of Kamudhi.

| Place of occurrence: கமுதி காளியம்மன் கோவில் தெரு வாதியின் வீட்டு முன்பு<br>Date of occurrence: 11.06.2019 | | | | | | | EXPLANATION OF DELAY AND REMARKS |
|---|---|---|---|---|---|---|---|
| Offence | Report of complaint | Apprehension of accused | Release on bail | Commencement of trial | Close of trial | Sentence or order | Date of FIR : 12.06.2019<br>Received by Court: 12.06.2019<br>Date of FR:14.06.2019<br>Date of Filing: 11.02.2021<br>Date of Numbering:16.03.2021 |
| 11.06.19 | 12.06.19 | 12.06.19 | 17.06.19 | 01.07.22 | 26.05.26 | 26.06.26 | |

குறிப்பு – இவ்வழக்கில் எந்தவொரு சாட்சியம் 3 தடவைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

Judgment in Calendar Case No. C.C. 88/2021 in the file of the District Munsif-cum-Judicial Magistrate Court, Kamudhi.

COMPLAINANT: சார்பு ஆய்வாளர் அரசுக்காக, கமுதி காவல் நிலைய குற்ற எண். 115/2019

| Name of the Accused | Age | Father's Name |
|---|---|---|
| முனியசாமி (பந்தல்முனியசாமி) | 42/19 | த/பெ. காளியப்பன் |

| Caste or Religion | Calling | Residence | Taluk |
|---|---|---|---|
| இந்து | -- | காளியம்மன் கோவில் தெரு | கமுதி |

Offence: அ) குற்றம் தாக்கல் – எதிரி பிரிவுகள் 294(பி), 323, 354 and 4 of TNPHW Act ன் கீழ்

ஆ) வனையப்பட்டது – எதிரி பிரிவுகள் 294(பி), 323, 354 and 4 of TNPHW Act ன் கீழ்

Finding : எதிரி குற்றவாளி இல்லை

Sentence : முடிவு / தீர்ப்புரை :

எதிரி ஆஜர். முடிவாக எதிரி இதச பிரிவுகள் 294(பி), 323, 354 and 4 of TNPHW Act ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை குவிமுச பிரிவு 248(1)ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார். எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது. இவ்வழக்கில் தடயசொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தடயசொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி